




ஓலை 179| ஓசை 302| ஜீன் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை




## தமிழறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்**

## பொருள்

**ஒருவருக்கு உண்மையான செல்வம் என்பது அவரது மன ஊக்கமே (சுயநம்பிக்கை) ஆகும். மற்ற பொருள் செல்வங்கள் எல்லாம் நிலைத்து நிற்காமல் அழிந்து போய்விடும்.**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# தமிழ் மொழி முழக்கம்

தமிழ்தான் தமிழர் அடையாளம்!

பாவகை : சந்தப்பா

தன்மானத் திமிர்கொள்வாய் தமிழா!
தமிழ்தான்உன் அடையாளம் அறிவாய்!
உன்மானம் தமிழென்றே உணர்வாய்;
உன்வேரில் பூத்தவைதாம் பிறமொழி!

தனக்கென்ற வரலாறு இல்லா
தரங்கெட்ட மொழிகளிலே மூழ்கி
உனக்கான அடையாளம் தொலைப்பதா?
உன்னுடம்பில் கழுநீரா ஓடுது?

பிறமொழியைத் தாயெனவே ஏற்றால்
பிறப்பேதான் வினாக்குறியாய் ஆகும்;
இறந்தவனாய் உயிர்ப்பதில்தான் இழிவே;
இன்றேநீ உணர்வாயென் தமிழா!

மானமின்றி மதிக்கெட்டே இழிந்த
மரமாக நின்றென்னக் கிழிப்பாய்?
ஆனவரை தமிழ்யடையா ளத்தை
அழிக்காது வாழவேநீ நினைப்பாய்!

இல்லையேல் இன்றேநீ இறந்துமே
இல்லாமல் ஒழிவதுவே மேலாம்;
அல்லவைகள் அகற்றியேதாம் முதன்மை
அகிலஅடை யாளத்தைக் காப்பாய்!

மன்னனுமே புலவனாக, புலவனுமே
மன்னனாக வாழ்ந்தயினம் தமிழினம்;
மண்ணுலகில் இப்பெருமை வாய்த்த
மாவினமோ வேறில்லை உணர்வாய்!







நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# துன்பத்தின் தாக்கம்

பாவகை : நேரிசை வெண்பா



1. இன்பம் கெடுக்கும் இயலாமை என்றுமே
இன்னலை ஊட்டிடும் இன்முகம்-வன்மையாய்
துன்பத்தை நல்கித் துவண்டிட வைத்திடும்
அன்பொன்றே மாற்றம் அறி.

2. மனதினில் நம்பிக்கை மங்கிய போதில்
அனத்திடும் வன்மம் அடரும்-இனமுமே
மல்லல் குறைய மறைவிலே தூற்றிடும்
அல்லல் பெருக்கும் அணி.

கவிஞர் செ. கலைவாணி

# தெருநாய்

யாரிடமும் பேசாமல்
அங்கு புகைந்துக் கொண்டிருக்கிறது
சிறியதாய் நெருப்பு.

என் மனம்
கொழுந்து விட்டெரியும்
கணத்தில்
புகையும் நெருப்பு
ஜ¬வாலையோடு
எரியத் தொடங்கலாம்.

அப்படி எரியும் நெருப்பு
என் நித்திரையில்
உடையப்போகும் கனவை நினைத்து
பசியடங்க
அணைந்தும் போகலாம்.

இவைப் பற்றி
யாதொரு கவலையுமின்றி
என் கை ரொட்டித்துண்டினைப்
பெருவதற்கு பிரார்த்தனை
விண்ணப்பம் வைத்தபடி
என்னைச் சுற்றிச்சுற்றி
வருகிறது
ஒரு தெருநாய்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# குழந்தை தொழிலாளி

எங்கள் குடிசையில் மின்விளக்கு இல்லை
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
போர்த்துக்கொள்ளப் போர்வையில்லை
அம்மா முந்தானையில் ஆயிரம் நட்சத்திரம்
எங்கள் வீட்டுச் சோறு பொங்கச்
செங்கல் காளவாசல் வேலைக்குப் போறேன்



தாகம் நாளும், எச்சிலை விழுங்கினேன்
வயிற்றுப் பசி, காற்றை உறிஞ்சினேன்
இளைப்பு நோயுடன் வாசல் தாத்தா
இருமல் தீர்க்க மாத்திரை வாங்கணும்
பாவாடைக் கிழிசலை மூடித்த தைக்க
ஊசி வாங்கணும்; கிழிசலைப் போக்கணும்

ஊசிப்போன கேப்பைக் கூழைச்
சூடு பண்ணி நாளும் குடிக்கணும்
ஆயிரம் ஒட்டுடன் கோரைப்பாய்
அதில் ஓரத்தில் தங்கச்சி பாப்பா
பால் வாங்கப் பணம் வேணும்
பாடம் படிக்க ரொம்ப ஆசை
ஆடல் கற்க மிக ஆவல்

தங்கச்சி பாப்பா நல்லாப் படிக்கணுமே
தலைநிமிர்ந்து சிறப்பா வாழணுமே
கல்லு தூக்கி முள்ளு தைத்து
கழுத்தும் வலிக்குது காலும் நோகுது
எங்க நிலை என்று மாறும்?
பாலகர்களைப் பணி செய்ய விடாதீங்க

பலகையிலே எழுதியிருக்கு
பலத்த வேலை பார்த்துப் பார்த்துப்
பழுத்தது கையும்
வீட்டுச் சூழல் காட்டு வேலை
எங்க வறுமைக்கு வழி சொல்லுங்க
முடிஞ்சா உதவிக் கரம் நீட்டுங்க!

கவிஞர் ரெஜினாபானு, மேலூர்

# ஒருதுளி பெருஞ்சுவை



தொலைபேசியில் அம்மாவின் குரல்
பாதியில் பேசுகிறது
என்னோட கண்ணீர்!

அப்பா என்றழைத்தாள்,
செல்லமாய்ப் புன்னகைத்தாள்,
அன்பாய் அணைத்தாள்...
தீர்ந்தது ஒருவேளை பசி!

இரவுக்கு வந்தது
நூறு காதல் கடிதங்கள்...
மின்மினிப் பூச்சிகள்!


இரவு நேரத்தில் வேலை,
காலையில் உறங்கச் செல்கிறது...
தெருவின் விளக்கு!

அடிக்கடி வருகிறாள்,
அப்பாவின் வார்த்தையில்...
இறந்துபோன அம்மா!

ஊர்சுற்றி வரும் பிள்ளைக்குத்
தினமும் கோயில் சுற்றுகிறாள்,
பத்துத் திங்கள் சுமந்தவள்!

குடியால் மடிந்த தந்தைக்குப்
பதினாறாம் நாள் படையல்...
மதுபானமும் புகையிலையும்!

காட்சிதரும் கற்சிலைக்குக்
காலையில் பாலபிஷேகம் நடக்கிறது,
தரிசிக்கும் கைக்குழந்தை!



அப்பா என்றழைத்தாள், செல்லமாய் புன்னகைத்தாள், அன்பாய் அணைத்தாள்... தீர்ந்தது ஒருவேளை பசி!

இரவுக்கு வந்தது நூறு காதல் கடிதங்கள்... மின்மினிப் பூச்சிகள்!

தொலைபேசியில் அம்மாவின் குரல் பாதியில் பேசுகிறது என்னோட கண்ணீர்!

இரவு நேரத்தில் வேலை, காலையில் உறங்கச் செல்கிறது... தெருவின் விளக்கு!

அடிக்கடி வருகிறாள், அப்பாவின் வார்த்தையில்... இறந்துபோன அம்மா!

குடியால் மடிந்த தந்தைக்குப் பதினாறாம் நாள் படையல்... மதுபானமும் புகையிலையும்!

காட்சிதரும் கற்சிலைக்குக் காலையில் பாலபிஷேகம் நடக்கிறது, தரிசிக்கும் கைக்குழந்தை!

கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# சிதைந்த சிட்டு

தெருவோரம் தினந்தோறும்
விளையாடி மகிழ்ந்த மகளே
யார் கண்பட்டதோ
இக்கோலமானாய்

காற்றொன்று வீசியதால்
உன் மேலாடை சற்றே அசைய
காளையன் கண்ணுக்கு - அது
காமத் தீனாய்த் தெரிந்ததோ?

கண்ணற்றுப் போவான்
சிட்டாய்ப் பறந்த சின்னஞ்சிறு வண்டு
பால் குடி மறந்து
எட்டாண்டுகளே ஆன பிஞ்சு

அதனைச் சிதைக்க
எங்ஙனம் மனம் துணிந்தது உனக்கு?
மனசாட்சியற்ற பேயே விலங்கினமாம்
நாய்க்கும் உண்டு பிறர்மேல் இரக்கம்

காமக் கொடூரனுக்கு - அது
இல்லாது போனதேனோ?
சிதைந்த அச்சிட்டின்
உயிருள்ள உடலைக் கண்டு
வலியால் அது துடிப்பதைப் பார்க்கையில்
நெஞ்சம் பதறுதடா

உன்னை உதைத்து மிதித்தாலும்
இந்த உள்ளம் ஆறுமா?
ஆயுள் தண்டனை தந்தாலும்
அப்பிஞ்சின் வலி தீருமா?



கவிஞர் பானு ஜிப்ரி, சாய்ந்தமருது (இலங்கை)

# பெண்கள் வடிவம்

பெண் என்பது பூவல்ல,
புயலையும் தாங்கும் வலிமை.
அவள் சிரிப்பில் அன்பு மலரும்,
அவள் மனதில் நம்பிக்கை நிறையும்.
கருணையும் தைரியமும் கலந்தவள்,
கனவுகளை நனவாக்கும் சக்தியுள்ளவள்.
உலகம் போற்றும் அழகை விட,
அவள் உள்ளத்தின் ஒளியே சிறந்த வடிவம்.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

இலக்கணம் கற்றதில்லை
இலக்கியமும் அறிந்ததில்லை
சிந்தையில் உதிப்பதை
சிந்தனையில் எழுதுகிறேன்

அனைத்தும் படித்தவனல்ல
அகங்காரம் எனக்கில்லை
கேள்விஞானமே என்னுள்
கேட்பதை எழுதிடுவேன்

பாடல் புனைந்ததில்லை
பாவலன் நானுமில்லை
அடுத்தவர் கவிதையை
பிரதி எடுப்பவனுமில்லை

எனக்குள் உதிக்கும்
எண்ணங்களை கவியாக்குகிறேன்
கேலிக்கு ஆளானாலும்
கேவலம் ஆனதில்லை

முத்திரை பதித்ததில்லை
முகம் சுழித்ததில்லை
அகத்தில் மகிழ்வோடு
அனைவரையும் மதித்திடுவேன்

பாராட்டோ தூற்றலோ
பகிர்தலை ஏற்றிடுவேன்
தமிழை வணங்கியே
தரணியை போற்றிடுவேன்

செந்தமிழில் இல்லையெனினும்
செப்புவேன் தமிழிலே
நற்றமிழால் நவின்றே
நானிலத்தில் உயர்ந்திடுவேனே

வாழ்க தமிழ்
வாழிய என்றுமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# பசுமை பேணும் காடுகள்



மழைப்பொழிவு இல்லையேல்
மண்ணுயிர் இல்லாது போகும்!
காலச் சமநிலை காத்திடவும்
பல்லுயிர் பெருக்கத்திற்கும்,

மண்வளத்திற்கும் நீரின்சம
சுழற்சியைச் சரிசெய்யவும்,
அனைத்துயிரினமும் காக்கவும்
மனிதர் வாழ்வாதாரம் பெறவும்,

காடுகள் முக்கியம்! பூமிபரப்பில்
முப்பத்தைந்து விழுக்காடிது!
நாட்டு வளம் பெருகக் காரணமே
இந்தக் காடுகள்தான் என்பர்!

வனங்கள் பாதுகாப்பு என்றே
தனித்துறை வைத்துக் காப்பாரிதை!
விலங்குகளின் புகலிடம் அடர்காடுகள்,
பறவைகளும் உயிரினங்களுமே

காடுகளை வளர்க்கின்றன, மனிதனல்ல!
மனிதன் சுயநலத்துக்காக இதனைச்
சிறிது சிறிதாக அழிக்கிறான்!
சட்டங்கள் அதைத் தடுத்துக் காட்டைப்

பாதுகாக்கும், மனித வாழ்வியலுக்காக!
விதிவிலக்காகக் கத்தார், நவ்ரு,
மொராக்கோவில் காடே இல்லை!
உப்புமண், பாலைவனம், ரசாயனக்

கலப்புமண் போன்றவையே காரணிகள் என்பர்!
செயற்கைப் பூங்காக்கள் அமைந்த
பசுமை இடங்கள் இங்கு அதிகம்!
மரங்களைப் பேணி, வீட்டிலும்

செடிகொடிகள் வளர்த்து நாமும்
காடுகளைக் காத்திடுவோம்!

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# இதயத்தை உடைக்கும் சக்தி

கோபத்தின்போது
வார்த்தையை
நிதானமாக முன்வையுங்கள்.
ஏனெனில்,
வார்த்தை முட்களாக
மனதைக் கிழித்தால்
அதனை
மீண்டும் சரி செய்ய முடியாது.
மனதுக்குள் புதைந்து கிடக்கும்
தீப்பொறிகள் ஒரு நாள்
வார்த்தையாய் வெடிக்கும் போது
உன் உறவுகள் உன்னை விட்டு
விலகும்,
கோபம் உன்னை உடைப்பதற்கு முன்
நீ அதனை தடுத்தால்
உன் உறவுகளை
நீ பாதுகாப்பாய்!



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா ரிம்ஸியா, மூதூர்-10

# அடரிருளின் ரகசிய வேர்களில்

என் துயரங்களை
கண்ணீரால் குளிப்பாட்டி,
பிரார்த்தனையின்
துணிகொண்டு கபனிட்டேன்;
ஆதியிறை நாயனின்
சந்நிதானப் பரப்பில்
ஆழக் குழிதோண்டி,
அடரிருளின் ரகசிய வேர்களில்
நிரந்தரமாய் அடக்கம் செய்தேன்!

கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)


# எழுதுகோல் ஏந்தியவன்

கவிஞன் என்பவன்
எழுதுகோல் ஏந்தியவன்.
எதிர்வரும் துன்பங்களை முறியடிக்க
நம்பிக்கையை சிந்தியவன்.
காலத்தை கவிதையால் கணிக்கும்
கணிதம் அவன்.
ஞாலத்தை அன்பால்
அரவணைக்கும் புனிதம் அவன்.
போதைக்குள் தினம்
முடங்காதவன்.
பாதைக்குள் நல்ல பொழுதை
தொடங்கும் ஆதவன்.
பணத்தால் வறுமையைக்
கண்டவன் அவன்.
குணத்தால் நல் அருமையை
கொண்டவன் அவன்.

நிறத்தில் கொஞ்சம்
கருமையை கொண்டவன் .
தரத்தில் பிறர்கொஞ்சும்
பெருமையைக் கண்டவன்.
சொற்களால் பிறர்க்கு
சொர்க்கம் படைப்பவன்.
சாதி பார்ப்போரை
நெருப்பாய் பார்ப்பவன்.

சாதிக்கப் பார்ப்போரை
பொறுப்பாய் காப்பவன்.

தாய்மையின் இலக்கணம்
அவன்.
வாய்மையின் இலக்கியம்
அவன்.



கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி

# சாமர்த்தியம்

நாள் கிழமை ஏதுமின்றி
எப்போதும் இறுக்கத்தோடு
இயல்பாய் கடந்துவிடும்
சாமர்த்தியம் மிகுந்தவள் அவள்!

கூச்சத்தின் மிகுதியில்
சில சரிகள்
சில தவறுகள் மட்டுமே
அவ்வப்போது
அவள் சொல்லிய வார்த்தைகள்!

பெயருக்கு கூட
தளர்த்தாத இறுக்கத்தை
எப்போது தனியே விட்டு
எப்படி கடத்தினாள்?
என்னுள் காதலை?

எங்கு தேடியும்
தெரியாத விடையாய்
இப்போது இளகிக்கொண்ட இதயத்தோடு
அவள் இயல்பாய் நடக்கையில்
ஆணின் சாமர்த்தியம் தான்
தனியே என்ன செய்யும்?



கவிஞர் யாழிசைசெல்வா

# பயணங்கள் முடிவதில்லை

கை பிடித்த உறவுகள்
கை தவறிப் போகும் போது
உள்ளம் கொஞ்சம் உடைந்து
தனிமை நெஞ்சில்
ஒட்டிக் கொள்கிறது

பார்க்கும் இடமெல்லாம்
பழகிய முகமே தெரிய
திசை எங்கும்
நினைவின் விசை
என்னை இழுக்கிறது

பேசிய வார்த்தைகள் யாவும்
இன்று மௌனத்தின் ஓசையில்
சுற்றி ஒரு கூட்டம்
இருந்தும் ஏனோ
வெறுமை ஒன்று உள்ளுக்குள்

நேற்று நீயும் நானும்
இன்று நான் மட்டும்
நினைவுகளோடு
நாளை என்னாகுமோ
நீ இல்லாத என் உலகம்
சத்தமே இல்லாமல்
கண்ணீர் வந்து
எழுதி செல்கிறது

நாம் வாழ்ந்த
நினைவின் பயணங்களை
என் ஞாபகங்களில்
நான் இருக்கும் வரை
என்னில் உன் பயணங்கள்
ஒருபோதும் முடிவதில்லை



கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# மாறாத அரவணைப்புக் குடையில்



மழைவந்தால் வாழையிலை
குடையாச்சு!
மனசுநொந்தால் அன்னைமடி
தலையணையாச்சு!

வெயிலடித்தால் அப்பன்நிழல்
மரமாச்சு!
வேதனைவந்தால் இருவருமே
மருந்தாச்சு!

கைபிடித்து நடக்கவைத்த
கால்கள்!
கண்கலங்க அழவிடாத
பாசங்கள்!

சோறூட்டி வளர்த்தெடுத்த
பந்தங்கள்!
சுமைதாங்கிச் சிரித்தமுகத்
தெய்வங்கள்!

குடிசையிலும் கோட்டைகட்டிக்
கொடுத்தவங்க!
குடையில்லா வாழ்வுக்குக்
குடையானவங்க!

வரலாறு பேசும் எல்லா
மனதிலும் என்றுமே!



கவிஞர் முர்ஷிதா, அக்குரனை (கண்டி)

# தந்தையர் தினம்

தந்தையர் தினம் தன்மானத்தின் இனம்
தற்சார்பு கொள்கை கொண்ட தலைவன்
சுயநலம் இல்லாத சுற்றத்தின் விழா
தந்தைக்கும் விழா தரணியே போற்றும்.

அன்னையர் தினம்போல அகிலம் கொண்டாடாது
அன்பினைப் பகிராமல் அறிவுரை தந்தவர்தினம்
அழகாக இல்லை ஆற்றலே மிகுந்திடும்
தந்தையென்றும் சொத்தின் கலங்கரை விளக்கம்.



உயிரைத் தந்தவரே உலகை பரிசளித்தார்
உயர்வாய் இருந்திடவே உழைத்தார் கடுமையாய்
கண்ணீர் சிந்தாத கடல்நீரே அவர்
கண்ணியம் காத்திடுவார் கடமையின் சின்னமாய்.

தலைமகனாய் விளங்கி தரத்தினைக் கடைபிடித்து
அளவுடன் வாழ்ந்திடவே அளவில்லாமல் உழைப்பார்.
தாயிற்கு துணை நின்றே காத்திடுவார்
சேயினைக் காப்பாரே சேவையே பெருவள்ளல்.

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலை

# தோற்றம்

சில புதைந்துபோன
எண்ணங்கள் போல,
பல நம்பிக்கைகளும்
பழமையானவைதான்!

எப்போது கைகூடும்
என்பதைப் பொறுத்தே,
அவை மற்றவர்களுக்குப்
புதிதாய்த் தோற்றம்
தருகின்றன!



கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# சொல்லத் தெரியாத எண்ணமோ?



என்னவோ என்னவோ சொல்லிக்கொள்ள
மனதில் எண்ணம் எழுகிறது!
வெளிப்படுத்திப் பார்க்க
மனம் அஞ்சிக்கொள்கிறது!

ஏக்கங்கள் அடங்க
மனதில் இடமிருக்கிறது,
ஆசைகளை மறைத்துக்கொள்ளப்
பழகிக்கொண்டது!

தூண்டில் போடும் புழுவில் ஏமாந்து
வாழ்க்கை தொலைக்கும் மீனாய் மாற,
நொடிகள் போதும் நமக்கு!

வார்த்தைகளுக்கு வசப்படுத்தி
ஈர்ப்பைக் கொடுக்க முடிகிறது!
ஏற்றுவிடத் தயக்கமிருந்தால்,
கண்கவர்தலில் இருந்து, மனம் கவர்தலில் இருந்து
தப்பித்துவிடலாம்!

விடுமுறை கொடுத்து ஒதுங்க,
விடைபெறுமா
ஆசைகளும் விருப்பங்களும்?

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# என் அப்பா!



நீர்உயிரால் மூவுயிராய் உதிக்கச் செய்தவனே!
ஓர் உயிருக்குச் சமர்ப்பணமாய்
என் பேனாமுனையைத் தீட்டுகிறேன்!

உலகிலேயே தன்னலமற்ற ஒரு உயிர்!
உன் அழுகையை மறைத்து,
எம்மைச் சிரிக்கவைக்கும் ஒரு உயிர்!

இரவுபகலாய் எமக்காய் உழைக்கும் ஓர் உயிர்!
தன் பலநாள் கனவுகள் சிதைந்தபோதும்,
என் செல்வங்களை ஈட்டித் தீட்டிட முனைகின்றாய்!

இம்மை மறுமை இருளகலக்
கல்வியைத் தந்திட முயலும் ஒரு உயிர்!
குடும்ப உறவுகளின் பிணைப்பை நீ தாங்கி,
என் தடைகளைத் தாண்டி,
என்னை வீரநடை போட வைத்தவர்!

உன் பேச்சினால் முயல நினைக்கிறேன்!
எத்தனை தடைகள் வந்தாலும்,
அத்தனை தடைகளையும் தாண்டிவிடுவேன்!

வாழ்வின் பல ஆயிரக்கணக்கான
அனுபவப் பாடங்களை,
ஒவ்வொரு நொடியும்
கற்றுக் கொள்கிறேன் உன்னால்!

என்றும் உன் நிழலில்
பின்தொடர்வேன் மகளாய்!

கவிஞர் ரிஸ்னா அருஸ்

# நல்லோரின் நட்பு

நன்றி மறக்காத குணமேயென்றும்
தெய்வ நிலை ஆகுமே
நல்ல நல்ல செயல்கள் என்றும்
நாளும் நிலைத்து நிற்குமே.

"நல்லோரின் நட்பு" என்றும்
உயர்வு நிலை தந்திடுமே
நாநயம் மிக்க சொல் என்றும்
மந்திரமாகுமே.



நல்லோரின் வழிகாட்டல்
வாழ்வில் வெற்றி தந்திடுமே
நன்றி மறந்த நட்பு என்றும்
புறந்தள்ள வேண்டுமே.

நட்பு போற்றி நட்பு வளர்க்கும்
உறவு வாழ்வில் வேண்டுமே
நாடும் வீடும் உயர்ந்திடவே
உழைப்பே மூலதனம் ஆகுமே.

நாடும் மொழியும் நமதிரு கண்களாய்
நாளும் போற்றும் குணம் வேண்டுமே
தேசப்பற்றை மூச்சாய் கொண்டு
நேசம் கொள்ள வேண்டுமே.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# தந்தை சொல் மிக்க மந்திரம்

பாவகை : கலிவெண்பா

நற்பண்பை நாடோறும்
நன்நெஞ்சில் ஊன்றிடும்
அற்புதத்தின் நல்லுறவாம்
ஆருயிர் தந்தைசொல்

வேறாக நின்று
விழுதாக தாங்கிடும்
பாராளும் பண்புதனை
பாங்காக்கும் விந்தைச்சொல்

ஏர்ப்பிடித்த பொற்கரத்தால்
ஏற்றிவிட்ட ஏணியவர்
தூர்ந்திடாத தன்னுழைப்பால்
தூக்கிவிட்ட தோணியவர்

போராட்ட வாழ்வையும்
பூந்தோட்டமாய் ஏற்றினார்
சாராடும் உப்புநீரை(வியர்வை)
சந்தனமாய் மாற்றினார்

மேதையாக்கி என்னையும்
மேதினியில் நடக்கவிட்டார்
பேதைமனம் மாற்றித்தான்
பேறுவகை கண்டுவிட்டார்

சோதனையை வென்றிடத்தான்
சூலுரைத்த தந்தையவர்
சாதனையின் குன்றேற்றும்
சான்றான்மை விந்தையிவர்

வாய்மொழியும் நல்வார்த்தை
வானுயர்த்தி சென்றிடும்
தாய்போல தாங்கியென்னை
தந்தைமனம் வென்றிடும்

பொன்மனத் தந்தையே
போற்றுகிறேன் உம்மையே
இன்முகத்தால் நல்வாழ்த்தும் ஈந்து.



கவிஞர் த. செல்வராணி, திட்டக்குடி

# ஆயிரம் தெய்வங்கள்

ஒற்றை கோவிலில்
ஆயிரம் தெய்வங்கள்
முதியோர் காப்பகம்

குழந்தை உருவத்தில்
குடியிருக்கும் இறைவன்
அனாதை காப்பகம்

அம்மா என்றாள்
புதிதாக வந்த மருமகள்
நினைவுகளுடன் காப்பகத்தில்
மாமியார்

காப்பக விண்ணப்பத்தில்
கையெழுத்திடும் மகன்
மகிழ்ச்சியில் அம்மா
மகனின் புரியாத
கையொப்பத்தை பார்த்து

ஒவ்வொரு உணவு இடைவெளியில்
வந்து போகிறான் மகன்
சாப்பிட வாங்க
காப்பாளரின் குரலில்



கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# முள்வேலியும் சுகம்தான்டி

முள்வேலியும் சுகம்தான்டி
முத்தழகு முத்தம்மா

உன்னைத் தேடிக்கிட்டு
ஓயாமச் சுத்துறேனே
என்னத்தைப் பண்ணி
எண்ணத்தை மாத்தினடி?

நெஞ்சுக்குள்ள காதலும்
நெறைஞ்சு கிடக்குதடி
வஞ்சி உன்னைப்
பார்க்காம மனசு கேட்கலடி

ஒத்தையடிப் பாதையில
காட்டுமுள்ளுச் செடியடி
முள்வேலியும் சுகம்தான்
முத்தழகே முத்தம்மா!

உசுரு போனாலும்
உள்ளம் மாறாதடி
முசுறு எறும்பாத்தான்
முடிச்சோட வாரேண்டி

சத்தியமாச் சொல்லிப்புட்டேன்
சம்சாரம் நீதான்டி
வைத்தியம் இல்லையடி
வம்பான காதலுக்கு!



கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி, இலங்கை



அகர முதல

# அன்புள்ள அப்பா!

உழைப்பின் உருவம் அவர்
உன்னதத்தின் வடிவம் அவர்
படிக்க வேண்டிய வயதிலும் உழைத்தவர்
வாழ வேண்டிய வயதிலும் உழைத்தவர்
ஓய்வெடுக்க வேண்டிய வயதிலும்
உழைத்துக்கொண்டிருப்பவர்
கேட்டதையெல்லாம் வாங்கி கொடுக்கும்
தந்தைகளை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள்
ஆனால்
நான் கேட்கலாம் என்று
நினைத்துக் கொண்டிருக்கும்பொழுதே
அதை நிஜமாக்கி என் கைகளில் தந்தவர் அவர்.
அன்னபூரணியின் ஆண் வடிவம் அவர்
அப்பா என்ற வார்த்தைக்கு இலக்கணம் அவர்
எத்தனை ஜென்ம தவமோ
இவருக்கு நான் மகளாக பிறந்திட.
இன்னும் எத்தனை ஜென்மம் நீளுமோ
இந்த தங்கம் மீண்டும் எனக்கு
தந்தையாக கிடைத்திட.



கவிஞர் தங்க. பிரியதர்ஷினி, கறம்பக்குடி

மழைவரும் முன்
கொடியில் காய்ந்து விட்டன
பூசணி பூக்கள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# நிலவும் கதிரும்

வளர்பிறை நிலவும் மறையும் கதிரும்
மாலை மயக்கத்தில் மடிசேரும் விந்தையோ?
வான்மடி மேலே வளைந்ததொரு தோணியாய்,
வெள்ளி நிலமகளும் விண்மீது மிதக்கிறாள்!
அலையற்ற நீரினில் அமைதியின் நிழலாய்,
இருசுடரின் பிம்பங்களும் இணைந்து ஆடுதே!
இயற்கையின் தூரிகையில் உருவான ஓவியமோ?
இயற்கை அன்னையின் இதழோரப் புன்னகையோ?
வியப்பொடு பெருமகிழ்வு விளைகிறதே காண்கையிலே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# அவள் யார்?

அவளை அவள் அறிந்தும் நான் அறிய
வாய்ப்பு இன்றி நான் திரிய தினம்
அவள் பார்வை மட்டும் என்னை அறிய
வழக்கமில்லாமல் என்னை நான் மறைய
தினம் புரியாத புதிர் தொடரில்
என் புத்தக கையோடு
ஒவ்வொரு வரிகளும் அவள்
வலிகளோடு என் வரிகளோடு
காதல் சொல்லாமல் இன்று காதல் இல்லாமல்
இரண்டு கண்களும் இடையே தள்ளாடாமல்
தூரப் பார்வை மட்டுமே
தூண்டிலில் மாட்டும் மீன் போல்
சுற்றித் திரிகிறது பேச வாய்ப்பில்லாமல்
யார் முதல் யார் பின் என்ற
பின்னோட்டம் தராமல்
காதல் முன்னோட்டத்தில் என்னவள் தினம்.
அவள் முதல் முதல் இதழ்
இடை முதல் கடை வரை
குருதிச் சீற்றம் திக்கு தெரியாமல்
இருவர் பின்னணியில் காதல்
போராட்டம் இன்றைய நூற்றாண்டின்
சொல்ல முடியாத சப்தங்களின்
சங்கீத கடமைகள்.
அவள் மனம் நோக்கி தினம்
அவளை நான் அவளை
என் எழுத்தில் தாக்கி!



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

# அசைவுகள்



வான் மேகங்களின் அசைவுகள்
பூமிக்கு நிழலையும் மாமழையையும்
கொண்டு வரும்.

கடல் அலைகளின் அசைவுகள்
பேரழகையும் பேரலையையும்
கொண்டு வரும்.

சூரியச் சந்திர கிரகங்களின் அசைவுகள்
இரவையும் பகலையும் கொண்டு வரும்.
மரக்கிளைகளினது இலைகளின் அசைவுகள்
தென்றல் காற்றின் இருப்பைச் சொல்லும்.

கடிகார முட்களின் அசைவுகள்
பொன்னான நேரத்தின் பெறுமதியைச் சொல்லும்.
இருதயங்களின் அசைவுகள்
உயிர்கள் உயிர்ப்புடன் இருப்பதை உறுதி செய்யும்.

ஈருயிர்கள் ஒருயிராய் சங்கமிக்கும் அசைவுகள்
இன்னோருயிரை பரிசளிக்கும்.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல

எழுத்தின் துணையின்றி,
தமிழ்க்கொம்பில் பொருளில்லை;

அன்பின் கொழுகொம்பன்றி,
அதன் துணையின்றி
வாழ்வில் ஒரு பொருளில்லை.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# கைப்பேசி


அலைபேசியின் மடியில்
மனிதம் அடிமைகளாய்
விரல்களின் நுனியில்
அறிவியலின் அபாயம்

இணையத்தின் கள்ளத்தொடர்பில்
அலைபேசியும் ஆபாசமாய்
இணையத்தில் உறங்கும் விழிகளால்
ஒரு சமூகமே குருடாய்

நாள்தோறும் தலைகுனிந்து
வாழும் ஒரு தலைமுறை
கைப்பேசியில் பதிவிறக்கப்பட்ட
பதுமைகளாய்


உறவுகளும் உற்சாகமும்
அலைபேசியின் திரையில்
ஒளிரும் ஒரு நிமிட
நிழல்களாய்

இல்லந்தோறும் அலைபேசியின்
தனிக்குடித்தனத்தால்
உறவுகளின் மொழிகள்
இன்று ஊனமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நாட்டுப்புற பாடலில் என்னவருக்கு கவிதாஞ்சலி



அல்லும் பகலும் ஐயா உனை நினைத்து
அணு அணுவாய் துடிக்கிறேனே.
எதற்கு எனை விட்டு போனீரென்று.
சின்ன சிறுக்கி இவ சீரழிஞ்சு போனேனே.

காதலுடன் நான் வைச்ச பூவும் பொட்டும்
நீ பூலோகம் விட்டு போனவுடன்
காத்தோடு கலந்ததய்யா.

காலத்தை வென்ற மகராசா
உனை காலனுக்கு கொடுத்தேனோ
நித்தம் நினைவால அழைக்கிறேனே
.
நானா கேட்டேன் உனை ஊரு,
நாடு சுத்தி பார்க்க கூட்டிப் போக.
சுத்தி பார்த்த இடமெல்லாம்
எனை சுழட்டி சுழட்டி அடிக்குதய்யா

ஊருக்கு போறீரென்று உனை சுத்தி சுத்தி வருவேனே
என்னை சுத்தலுல்ல விட்டு புட்டு
நீரு உலக விட்டு போனதேனோ

ஐயா உன் கண்ணோரம் சிரிப்பை
நான் கண் மூடி தேடுறேனே.
கண்ணும் தான் விழுந்து போச்சோ
உனை கட்டையில போக விட்டேனோ

ஓங்கி ஒலிக்கும் உனது குரலை கேட்காமல்
ஒடுங்கி போய் கிடக்கிறேனே
தேடி தேடி பார்க்கிறேனே.
எனை தேடலில விட்டுபுட்டு
உன் தேகம் தான் உருகி போனதேன்.

சுவாசிக்கும் மூச்செல்லாம் சுமதி சுமதி என்றீரே
சுவாசிக்க மறந்து சுவாசத்தை காற்றில் விட்டீரோ
உன் சுவாசத்தை தேடித்தேடி நானும்
சுவாசிக்க மறந்து போய் கிடக்கிறேனே.

நித்தம் எனை கலங்க விட்டு
நிம்மதியாய் போனீரோ
இமை மூட மறுக்குதய்யா.
நின் முகம்தனை காணாமல்

கரங்களும் நடுங்குதய்யா
உன் கரம்தனை கோர்க்காமல்
விழி வழியே வரும் கண்ணீரும்
நம் காதலை கூறுதய்யா

நித்தம் நினைவாலே அணைக்கிறேனே
காத்தோடு வந்து தலைகோதி விடுமய்யா
நானும் காற்றாய் வந்து உம்மோடு
கலக்கும் வரை கற்பனையில்
காலத்தை கடத்துவேனே.

கவிஞர் சுமதி தசரதன்

# வையம் மகிழ்ந்த நாள்

வெண்கதிர் தோன்றக் கழியும் பேரிருள்
வளவன் எழ வீழும் பகை
வளமை பெருகி வறுமை விலக
வையம் மகிழ்ந்த நாள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

## சமூக நலனில் அக்கறை கொள்

சரிவர பார்த்தே
சங்கடங்களை நீக்கிடு.
சலனமில்லா முயற்சிகளுடன்
சத்தியமாய் உயர்ந்திடு.

சந்நியாசி ஆனாலும்
சச்சரவின்றே பழகிடு.
உறவுகளோடு என்றும்
உளமாற வாழ்ந்திடு.

உறக்கம் கண்களில்
உள்ளமோ உலகிற்காக.
உத்வேகம் கொடுத்திடு..
உயரவே பறந்திடு.

நல்லுலகம் போற்றும்
நல்மனிதனாய் வென்றிடு.
மணக்கும் பூவின்
மலர்ச்சியாய் பழகிடு.

மலையும் உயர்வும்
மடுவும் பள்ளமும்
மாறிட போரிடு
மானமுள்ளவனாய் கொடிகட்டிடு.

மங்களமான நாட்களாய்
மாற்றங்களை படைத்திடு.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# தீராத்தாகம்

வானவில் நிறங்கள் ஏழு எனின்
உன்னை பார்க்கும் போது தோன்றுவது என் எதிர்காலமே!
மூன்றே எழுத்தாய் வந்த உன்னையே
வள்ளுவன் வாழ்வின் திட்டமாய் பாடினானே

உன்னை ஏந்திய பல கரங்கள் இன்று வீழ்ந்தது இல்லை
மாறாக அதை ஓங்க செய்தது உன் தயவே!
ஆசிர்வாதம் கிடைக்கும் பெரியவர் சொல்லை
கல்லாய் என்று போதிக்கும் ஆசான் வடிவமே

மரத்தின் கீழ் ஆதியில் எழுந்த நீயோ!
குளிரூட்ட அறையில் இன்று ஏதோ என்று
கிடைக்கும் அழகிய அருளோ?!
கண்கள் கலங்க வைக்கும் உந்தன் வெற்றி
நாம் அடைய துடிக்கும் ஓர் உச்ச பயணமே!

கடினமாகும் எம் வழியில்
உன் துணை வேண்டிய அழகிய காலமே
இதில் கலக்கம் இல்லாதது உன்னிடமே!
சுரைக்காயும் கரையும் திரவமே
மானுடம் காணும் கஷ்டங்கள் போக்கும்
வாழ்வில் அடித்தளமும் நீயாகுமே.

நாம் கண்ட சரித்திரவாதிகள்
நாம் காணா வேதகர்கள்
உன்னை போற்றும் புலவர்கள்
அனைவரின் வாயால் ஒலிக்கும் உன் சத்தமும்
எந்தன் வாயில் உலர்த்தி நிற்கிறோமே!

எம் எதிர்காலமும் வேண்டி
நிற்கிறது ஒரு மேடை வேண்டியே
அதுவும் கல்வி என்னும்
உன்னை வேண்டியே தவிக்கிறோமே
இதுவே என் தீராத்தாகமே!



கவிஞர் லபா நளீர், குருந்துகொல்ல (கண்டி)

# விரைவாய் சென்றுவிடு துளிர்ப்பதற்கு

கொஞ்சம் கூட
எம்மீது இரக்கம் இல்லையோ!
இயற்கையின் கரங்களே
இறையவன் படைப்பில்
சுட்டெரிக்கும் கதிர்களாக
மாறி நின்று தண்டிக்கும்
சுழற்சிமுறை ஆயுதமோ!

காலை படுக்கையில் இருந்து
வியர்வையில் குளிக்க
ஆயத்த நிலையில்
தயார்படுத்தப்படும் மெய்
வெப்பம் வெதுப்பகமாக மாறி
உயிர்களை விரட்டியடிக்க
வெப்பநிலையை அளவிட
வாய் பிளக்கும் வெப்பமானி செல்சிஸ்!



பகலவன் பகலில் கொளுத்துகிறான்
இல்லை இல்லை
இரவிலும் அல்லோ வெளுத்துவாங்குகிறான்
தாகம் தாகம் என
நா வரண்டு துடிக்கும்
ஒரு நாளைக்கு எத்தனை லீற்றர்
ஓராயிரம் தடவை பேசிய
நா இன்று தண்ணீர் அருந்தாமல்
தொண்டைக்குழி காய்ந்து
சாக கிடக்கிறது!

ரோசா இதழ் ஒத்த மேனி
வெப்பத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை
வதனம் பார்க்க துடிப்பேன்
கடி கடி எனும் தோலினை
சொறி சொறி என சொறிஞ்சி முடிப்பேன்!

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகோ.
முக்காடு போடச் சொல்லியது
இயற்கை எத்தனை நாள் பொறுக்கும்?
இழிவான மனித நிலை கண்டு
எங்கும் வெப்பம் என்ன என்று சொல்ல?
தீயாய் நீயும் தீவில் மேய்கிறாயோ?
விரைவாய் நீயும் சென்றுவிடு
விடை தருவாய் நீ எனக்கு!

கவிஞர் திருமதி. ஜுவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)



## எல்லாம் சரிதான்

நிறைய பணிகள்
நிலுவையில் உள்ளதே,
அடுத்து அடுத்து
தோல்வி தொடர்கிறதே,

எதிர்பார்ப்புகள்
ஏமாற்றமாகிறதே,
பேசுபவைகள்
தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறதே

என்று வருத்தப்பட்டுக்
கொண்டிருந்தால்
அனைத்தும்
சரியாய்விடுமா?

அடுத்தவற்றுக்குக்
காரணம் அறிந்து
செயல்பட வேண்டாமா?

எனப் புத்தியின்
முகத்தில் அடித்தாற்
போன்ற யதார்த்தக்
கேள்விக்கு,

பதிலாய்
"சரிதான்,
அதுக்காக
அந்தக் கணத்து
உணர்வுகளை
வெளிப்படுத்தாமல்
இருக்க முடியுமா?"
மனதிடமிருந்து

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# மலையின் மறைவில்

சிறுகதை




கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு மலை அடிவாரம். 'வேளிசேரி' எனப்படும் அந்த கிராமத்தில், கோடையின் கானல் உணர்வுகளை உருக்கும் அளவுக்கு இயற்கை சுட்டெரித்துக் கொண்டிருந்தாலும், அதே நேரத்தில் அது ஒரு மர்மமான நிழலையும் தன்னுள் ஒளித்து வைத்திருந்தது.

ஹரிஷ், தன் பள்ளிப் பருவத்திலிருந்தே மர்மங்களைத் துலக்குவதிலும், புதையல் தேடுவதிலும் ஆர்வம் கொண்டவன். அவன் அப்பா தியாகராஜன் ஒரு கிராமத்துப் பள்ளி ஆசிரியர்; அம்மா சரஸ்வதி ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இல்லத்தரசி. ஹரிஷின் லட்சியம் — உலகின் சிறந்த தடய அறிவியல் அறிஞராக (Forensic Scientist) ஆக வேண்டும் என்பதுதான்.

அதற்காக அவன் திருநெல்வேலியில் உள்ள ஒரு கல்லூரியில் குற்றவியல் (Criminology) படிப்பில் சேர்ந்தான். அங்கு அவனோடு பயின்ற ஏழு நண்பர்களில் அமலா என்ற மாணவியும் ஒருத்தி. அவளுடன் ஹரிஷுக்கு நட்பு ஏற்பட்டது. ஹரிஷின் கூர்மையான கவனிப்புத் திறனும், ஆழமான சிந்தனையும் அமலாவை மிகவும் கவர்ந்தன. ஆனால், ஹரிஷ் எப்போதும் தொழில்நுட்ப நுணுக்கங்களிலும், மர்மங்களைப் பகுப்பாய்வு செய்வதிலுமே மூழ்கியிருந்ததால், அவளுக்குத் தன் காதலை வெளிப்படுத்தத் தெரியவில்லை.

ஒரு நாள், வகுப்பிற்கு அமலா வழக்கம்போல வந்திருந்தாள், ஆனால் ஹரிஷ் வரவில்லை. வகுப்பறையே வெறிச்சோடிக் காணப்பட்டது. அடுத்த நாள், கிராமமே ஸ்தம்பித்தது. ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த பழைய தண்ணீர்

கவிஞர் ம. ஹரிஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

சிறுகதை

தொட்டி ஒன்றில் ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டது. அந்த உடலை முதலில் கண்டுபிடித்தது ஹரிஷ் தான். "யாரோ ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டார்கள்" என்ற செய்தி ஊருக்குள் காட்டுத்தீயாகப் பரவியது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேஷ் மற்றும் அவரது குழுவினர், சந்தேகத்தின் பேரில் ஹரிஷிடம் விசாரணையைத் தொடங்கினர். "நீ தடய அறிவியல் ஆய்வுக்கூடத்தில் பயிற்சி பெறும் மாணவன். இந்த உடலை முதன்முதலில் நீயே கண்டுபிடித்திருக்கிறாய்... நீ ஏன் கல்லூரிக்குச் செல்லாமல் விடுப்பு எடுத்தாய்?" என்று இன்ஸ்பெக்டர் கேள்விக் கணைகளைத் தொடுக்க, ஹரிஷ் மௌனமாக நின்றான்.

மரணங்கள் அத்துடன் நிற்கவில்லை; தொடர்ந்தன. மூன்றாவது சடலம் கிராமத்தின் மேற்குப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்டது. வியப்பு என்னவென்றால், ஒவ்வொரு முறை சடலம் கிடைக்கும் இடத்திலும் ஹரிஷே முதலாவதாக இருந்தான். ஒட்டுமொத்த கிராமமே ஒரு கொலைக் களமாக மாற, புலனாய்வாளர்களின் முழுக் கவனமும் ஹரிஷின் மீது திரும்பியது. போலீசார் ஹரிஷைக் கைது செய்து, "இத்தனைக் கொலைகளும் எப்படி நடந்தன?" என்று தீவிர விசாரணை நடத்தினர்.

அதற்கு அவன் மிகவும் நிதானமாகவும், அழுத்தமாகவும் பதிலளித்தான்:

"நான் கொலைகாரன் அல்ல. நான் கொலையைக் கண்டுபிடிக்கிறேன்; சதிவலைகளை அறுக்கிறேன்."

இறுதியாக, ஆய்வுக்குழுவினர் அங்கிருந்த DNA தடயங்களையும், கத்தியில் இருந்த விரல் ரேகைகளையும் ஆய்வு செய்து, மனநல மருத்துவமனையில் இருந்து தப்பி ஓடிய ஒரு மனநோயாளிதான் இந்தக் கொலைகளைச் செய்தான் என்பதைக் கண்டுபிடித்தனர். ஹரிஷ் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டு, அவன் விடுவிக்கப்பட்டான்.

கவிஞர் ம. ஹரிஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

அம்மா, அப்பா, அமலா என அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், ஹரிஷின் மனதுக்குள் ஒரு தீராத மர்மம் ஓடிக்கொண்டிருந்தது. "நான் யார்?" என்ற கேள்வி எப்போது எழுந்தாலும் அவன் திடுக்கிட்டுப் போவான்.

ஒரு நாள் இரவு, அமலா அவனுக்குத் தொலைபேசியில் அழைத்துச் சொன்னாள்: "நீ இவ்வளவு ஆழமாகச் சிந்திப்பதும், உன்னுடைய ஒவ்வொரு நகர்வும் ஏதோவொரு பெரிய மர்மத்தைச் சொல்வது போல எனக்குத் தோன்றுகிறது." அவன் மெலிதாகப் புன்னகைத்துவிட்டுச் சொன்னான்:
"நான் மர்மத்தின் நிழல்."
"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று அவள் குழப்பத்துடன் கேட்டாள்.
"முதலில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு உடல்களும் உண்மையில் வேறு நபர்களுடையவை. அவை என் நண்பன் தினேஷின் அடையாள அட்டையோடு இருந்தன. தினேஷ் மூன்று வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டான். அவனுடைய அடையாளங்களைப் பயன்படுத்தி, நான் ஒரு நிழலாக வாழ்வதைத் தேர்ந்தெடுத்தேன்." அமலாவின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்தன. "அப்படியென்றால்... நீ யார்?"

அவன் மெதுவாகச் சொன்னான்:
"நான் தினேஷ் அல்ல; ஆனால், அவனது நினைவுகளின் வடிவம், அவனது கானல். அவனது மறைவுக்குப் பின்னால் நானே அவனாக வாழ்கிறேன்."
அதிர்ச்சியடைந்தாலும், கண்ணீர் கலந்த புன்னகையோடு அவள் தன் காதலை மெல்லிய குரலில் பிரகடனப்படுத்தினாள்: "உன் மர்மங்களோடு சேர்ந்தே இருக்கட்டும் என் வாழ்க்கையும்!"

கதை முடிவு: மலைகளின் அகன்ற பரப்பில், எப்போதும் மர்மத்தின் நிழலாகக் காத்திருக்கும் ஹரிஷ், உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதில் தீவிரமாக இருக்கலாம். ஆனால், அவன் யார் என்ற உண்மையான மர்மத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. அந்த மர்மமே அவனாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

கவிஞர் ம. ஹரிஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

தவறாமல் மழை பெய்ய நாட்டில் நல்லொழுக்கம் மிக்க வேளாளரது ஏர் நடக்குமாயின் நாட்டில் இயலிசை, நாடகம் நடக்கும். பல்வேறு சிறப்புகள் நடக்கும், படை பலம் குன்றாது, தர்மம் தவறாமல் நடக்கும், உலகில் உயிர்கள் தோன்றும், பசி மக்களை நலிவிக்காது என்று ஏர் நடத்தற் சிறப்பைப் போற்றுவது மட்டுமல்லாமல், காராளர்தம் தொழிற் சிறப்பை மிக அழகாக எடுத்தோதுகிறார். ஏர்த் தொழில் முடி மன்னருக்கும், அருமறை அந்தணருக்கும் மன்னர் பின்னோராம் வணிகருக்கும் உதவவல்ல உயர்வுடையது என்பதே ஏர் எழுபது நூல் முழுவதும் பேசப்படுகிறது.

"கார் நடக்கும் படி நடக்கும் காராளர் தம்முடைய
ஏர் நடக்கும் எனில் புகழ்சால் இயலிசை நாடகம் நடக்கும்
சீர் நடக்கும் திறம் நடக்கும் திருவறத்தின் செயல்நடக்கும்
பார் நடக்கும் படை நடக்கும்; பசி நடக்க மாட்டாதே!" (19)

"காரி(மழை) பொழிந்தால் காராளரின்(உழவரின்) ஏர் நடக்கும். உழவுத் தொழில் சிறப்பாக நடந்தால் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் தெருவெங்கும் முழங்கும்.செல்வம் கொழிக்கும். திருவறத்தின் செயல்களும் நடக்கும்.படைச் செயலும் சிறப்பாக நடக்கும். ஆனால், பசி மட்டும் இருக்காது" என்று பாடுகிறார்.



ஏர் உழுவதற்கான உழவுக் கருவிகள் மற்றும் உழவுத்தொழில் பற்றி எழுபது பாடல்கள் இந்நூலில் உள்ளடக்கமாக உள்ளன. இதில் ஏர் கருவியின் உறுப்புகளும், உழவுத் தொழிலும் வரிசைபட கூறப்பட்டுள்ளன. தமிழிலக்கியங்கள் என்றுமே நல்வழியைத்தான் கூறுகின்றன.

கம்பர் காலத்திலும் கலிகாலத்திலும் மட்டுமல்ல எக்காலத்துக்கும் சிறப்புற்று விளங்குவது உழவுத்தொழில் ஒன்றுதான். ஏர்த்தொழிலின் சிறப்பு கூறும் கம்பரது இவ்விரு நூல்களை இன்றளவும் பலர் அறியாததால்தான், குறிப்பாக

வேளாளர் தம் பார்வைக்குப் போய்ச் சேராததால், விளைநிலங்கள் நல்ல விளைச்சளைப் பார்க்காமல் நல்ல விலைக்கு விற்கப்பட்டுக் கட்டடங்களாகிப் போகும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

"கம்பரால் இவ்வளவு சிறப்பித்துக் கூறப்படும், நாட்டின் உயிர் நாடியாக விளங்கும் உழவுத்தொழிலை மறந்துவிட்டு நாம் வேறெந்த தொழில் செய்து உயிர்வாழப் போகிறோம்" என்ற கேள்வி "விதை"யை, ஒவ்வொரு விளை நிலக்காரர்களும் தங்களது மனமென்னும் நிலத்தில் "விதை"த்தால்,

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்; பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்ற நல்வழி

திருக்குறளில் உழவு என்ற அதிகாரம் 104 ஆவது அதிகாரமாக அமைந்துள்ளது.சிறுபான்மை வணிகர்க்கும்,பெரும்பான்மை வேளாளர்க்கும் உரிதாய உழுதல் தொழில் செய்விக்குங்கால் ஏனையோர்க்கும் உரித்து என்பர் பரிமேலழகர்.அக்கால நிலை அது போலும்,ஆனால் திருவள்ளுவர் உழந்தும் உழவே தலை,சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் (1031)உழுவார் உலகத்தார்க்கு ஆணி (1032) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033) என்பர்.அவர் உழவை மிக மதித்தார் என்பதும் அரசரே உழவர்க்கு அடுத்தபடிதான் என்பதும் அவர் குறளாலேயே விளக்கமுறும் (1034).
உழவன் உலகின் உயிர்,உழைப்பாளி காடு,கடல்,நிலம்,வணிகம் எனப் பல தளத்திலும் உழைப்பான்,உயிர்களுக்கு அன்னையைப் போன்றவர் உழைக்கும் உழவரே (வெண்பாமாலை.344).போர்ப் படையைவிட ஏர்ப்படையே சிறந்தது.அரசரைவிட உழவரே சிறந்தவர்(பெரும்பொருள்)விளைவிக்கும் காலத்தில் விளைவிக்க வேண்டும்.உழவர் குடிக்கு வேண்டாதது சூது.வேண்டுவன பார்ப்பாரைக் கண்டு எச்சரிக்கையாக இருத்தல்.உழவை விரும்பியப் போற்றுதல் (திரிகடுகம்.42)ஒரு நல்ல உழவன் நாள்தோறும் ஏரைப் போற்றுவான் புன் செய் நிலத்தைத் திருத்துவான்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

எருவிடுவான்,கலப்பையால் நிலத்தை உழுது பண்படுத்துவான் (சிறுபஞ்சமூலம்.52)உழவனுக்கு எருதுகள் இல்லாமை இன்னா.நிலத்தின் ஈரம் இல்லாமை இன்னா (இன்னாநாற்பது.4).நிலத்தை உழுது விதைத்து நெற்பயிர் விளை (ஆத்திசூடி.82) ஒருவரை வணங்கி வாழ்தலைவிட உழுது விளைத்து வாழ்தல் இனிது.பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.உழவு வழி வரும் செல்வம் குன்றாது (கொன்றை வேந்தன்.77)உழவு பணியே சிறந்தது.பிற பணி எல்லாம் பழுதுடையவை (நல்வழி.12) உழவுர்க்கு அழகு தானே உழைத்து விளைத்த உணவை உண்ணுதல்,உழுதொழிலைச் செய்து உணவு உண்ணாது வறிதே ஏழையாக இருப்போர் பதராவர்.

உழவுத் தொழிலே சிறந்தது.

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலைப் பின்பற்றியே நிற்கும்.அதனால் எவ்வளவு துன்பமானாலும் உழவே சிறந்த தொழிலாகும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்;.இதனை,
சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள்.1031) என்ற குறளின் வழி தெளிவுப்படுத்தியுள்ளார்.

உழவர் அச்சாணி போன்றவர்
உழுத்தொழில் செய்யும் வலிமை இல்லாது பிற தொழில் செய்கின்றவரையும் தாங்குவதால்,உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர். அவர் இதனை,
உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து (1032) - என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (1033) என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

உழுது நெல்லை உற்பத்தி செய்யும் உழவர்கள் பல வேந்தரின் நிலங்களையும் தம் வேந்தரின் நிலங்களையும் தம் வேந்தரின் குடைக்கீழ் கொண்டு வருவார்கள் என்பதை,

இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது
கைசெய்துஊண் மாலை யவர் (1035) என்ற குறளின் வழி வெளிப்படுகிறது.

உழவரின் கைத்தொழில் செய்யாது மடங்கி இருக்குமானால் பற்றற்ற துறவிகளுக்கு வாழ்வு இல்லை என்பதை,
உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை (1036) என்ற குறளின் வழி தெளிவுப்படுத்தியுள்ளார்.

மண்ணைக் காயவிடல்

நிலத்தை உழுபவன் ஒரு பலம் அளவுள்ள புழுதி கால் பலம் அளவு ஆகும்படி மண்ணைக் காயவிட்டால் அந்நிலப் பயிருக்கு ஒரு பிடி எருவும் இட வேண்டாமல் மிகுதியாக விளையும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளா. இதனை

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்ததுஎருவும்
வேண்டாது சாலப் படும் (1037) என்ற குறளின் வழி அறியமுடிகிறது.

இலம்என்று அசைஇ இருப்பவரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும் (1040) என்ற குறளின் வழி கூறியிருக்கிறார்.இதன் மூலம் எப்போதும் நிலைத்து நிற்கும் தொழில் நிலத்தொழிலாகிய உழவு தொழில் செய்ய வேண்டும் என்பது புலப்படுகிறது.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

**உழவனின் இலக்கணம்**

ஒரு நல்ல உழவன் தன் நிலத்திலிருந்து கிடைக்கும் வைக்கோலைச் சேர்த்து வைத்திருப்பான் நாள்தோறும் உழுது ஏரைப் போற்றுவான் புன்செய் நிலத்தையும் திருத்துவான்.எருவிடுவான் கலப்பையால் நிலத்தைப் பண்படுத்துவான்.இதனை, நன் புலத்து வை அடக்கி,நாளும் ஏர் போற்றி புன் புலத்தைச் செய்து எருப் போற்றிய பின் நன் புலக்கண் பண் கலப்பை பாற்படுப்பான் உழவன் என்பவே
நுண் கலப்பை நூல் ஓதுவார் (சிறுபஞ்ச.58) என்ற பாடலில் மூலம் உழவரின் இலக்கணத்தை அறியமுடிகிறது.

வேளாளர்க்கு அழகு

சூதாடிப் பொருள் சேர்க்க விரும்பாமை,பார்ப்பனரைத் தீயாகக் கொண்டு மிக அகலாமை,மிக அணுகாமை உழவுத் தொழிலை விரும்பிச் செய்தல் ஆகியன வேளாண் குடிக்கு அழகுகள் ஆகும்.இதனை நல்லாதனார்,

கழகத்தால் வந்த பொருள் காமுறாமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்
உழவின்கண் காமுற்று வாழ்தல் - இம் மூன்றும்
அழகு என்ப வேளாண் குடிக்கு (திரிகடுகம்.42) என்ற பாட்லின் வழி அறியலாம்.மேலும் மற்றொரு பாடலில் உழும் போது சால் போகும் வழியை கவனிக்க வேண்டும் என்பதை,

சால் நெறிப் பாரா உழவனும் தன் மனையில்
…………………………………………………
……………………………………இம்மூன்றும்
கடன் கொண்டார் நெஞ்சில் கனா (திரிகடுகம்.மி.பா.3)
என்ற பாடலின் வழி தெளிவுப்படுத்தியுள்ளார்.உழவுத் தொழிலில் ஏர் பூட்டி உழுவதற்கு முன் அதன் குறைப்பாடுகளை அறிந்து ஏர் பூட்ட வேண்டும்

## முடிவுரை

இந்தியாவில் இருக்கும் தமிழகத்தில் இன்றளவும் உழவுத் தொழில் சிறந்ததாக காணப்படுகிறது.இத்தகைய உழவுத் தொழிலின் மூலம் விளையும் பொருட்களை இன்றளவும் உட்கொண்டு மக்கள் உயிர் வாழ்கின்றனர்.இத்தகைய உழவின் சிறப்பை அற இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

## துணை நூற்பட்டியல்

1. பாலசுந்தரம் ,ச திருக்குறள் தெளிவுரை மணிவாசகர் பதிப்பகம் சென்னை -600017 பதிப்பு -2000

2 இராமசுப்பிரமணியம்,எம்.ஏ (உ.ஆ) பதினெண் கீழ்க்கணக்கு தொகுதி 1 செல்லப்பா பதிப்பகம், மதுரை -625001 முதற்பதிப்பு -2009

3 இராமசுப்பிரமணியம்,எம்.ஏ (உ.ஆ) பதினெண் கீழ்க்கணக்கு தொகுதி 3 செல்லப்பா பதிப்பகம், மதுரை -625001 முதற்பதிப்பு -1999

4 பத்மதேவன்,தமிழ்ப்பிரியன் (உ.ஆ) நீதி நூல் களஞ்சியம் கொற்றவை வெளியீடு முதற்பதிப்பு -2014

5 அகராதிகள் செந்தமிழ்ச் சொற்ப்பிறப்பியல் பேரகரமுதலி கௌரா தமிழ் அகராதி

# தமிழறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை

கட்டுரை



கா. சுப்பிரமணிய பிள்ளை (நவம்பர் 5, 1888 — டிசம்பர் 12, 1945) இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மொழிக்கும், சைவ சித்தாந்தத்திற்கும், சட்டத் துறைக்கும் இணையற்ற பங்களிப்பை வழங்கிய மாபெரும் தமிழறிஞர், உரையாசிரியர், வழக்கறிஞர் மற்றும் பேராசிரியர் ஆவார். 'கா.சு. பிள்ளை' என்று சுருக்கமாக அழைக்கப்படும் இவர், தூய தமிழில் பேசுவதிலும் எழுதுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

## இளமைக் காலமும் கல்வியும்

கா. சுப்பிரமணிய பிள்ளை திருநெல்வேலியில் கலியாணசுந்தரம் பிள்ளை — மீனாட்சியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். தொடக்கக் கல்வி: திருநெல்வேலி சைவ சபாப் பள்ளியிலும், சி.எம்.எஸ். (C.M.S.) கல்லூரியிலும் பயின்றார். உயர் கல்வி: சென்னை கிறித்தவக் கல்லூரியில் பி.ஏ. (B.A.) பட்டமும், சென்னை சட்டக் கல்லூரியில் பி.எல். (B.L.) பட்டமும் பெற்றார்.

**முதுகலைச் சட்டம்:** தொடர்ந்து படித்து எம்.எல். (M.L.) சட்டப் பட்டமும் பெற்றார். தமிழகத்தில் முதன்முதலில் எம்.எல். பட்டம் பெற்ற ஒரு சில தமிழர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழில் மற்றும் பேராசிரியப் பணி

சட்டப் படிப்பை முடித்த பின், சென்னை உயர் நீதிமன்றத்தில் சில ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர், சென்னை சட்டக் கல்லூரியிலேயே பேராசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்


கட்டுரை

அதன் பிறகு, தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றின் காரணமாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்று, செப்பமான முறையில் பணியாற்றினார்.

## தமிழ் மற்றும் சைவ சமயப் பணி

சட்டத் துறையில் இருந்தாலும், கா.சு. பிள்ளையின் நெஞ்சம் எப்போதும் தமிழ் இலக்கியத்தையும், சைவ சித்தாந்தத்தையுமே நாடி நின்றது.

**இலக்கிய வரலாறு:** தமிழில் முதன்முதலில் முறையான இலக்கிய வரலாறு எழுதியவர்களில் இவரும் ஒருவர். இவர் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூல் இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகிறது.





**சைவ சித்தாந்தப் பரப்புரை:** திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் (கழகம்) இணைந்து பல நூல்களை எழுதினார். மெய்கண்டாரின் 'சிவஞானபோதம்' போன்ற கடினமான தத்துவ நூல்களுக்கு எளிய உரை எழுதினார்.

**பெரியபுராண ஆராய்ச்சி:** சேக்கிழாரின் பெரியபுராணத்தை ஆழமாக ஆராய்ந்து, அதன் வரலாற்றுப் பின்னணியை விளக்கி இவர் எழுதிய 'சேக்கிழார்' என்னும் நூல் மிக முக்கியமானது.


திரு அ. வில்சன், இதழாசிரியர்

## முக்கிய நூல்கள்

இவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள் சில முக்கிய நூல்கள்:




- தமிழ் இலக்கிய வரலாறு
- இலக்கிய வரலாறு (சுருக்கம்)
- சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம்
- சைவ சித்தாந்த விளக்கம்
- தாயுமானவர் வரலாறு
- குமரகுருபரர் சரித்திரம்
- மெய்கண்டாரும் சிவஞானபோதமும்

சட்டத் துறையிலும் தன் பங்களிப்பைத் தந்த இவர், 'இந்திய தண்டனைச் சட்டம்' (Indian Penal Code) மற்றும் 'இந்து சட்டக் கொள்கைகள்' ஆகிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து, சட்டம் சார்ந்த கருத்துகளும் தமிழில் வெளிவர முடியும் என்பதை நிரூபித்தார்.

## சிறப்புகள் மற்றும் மறைவு

தமிழுக்கும் சைவத்திற்கும் இவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, இவருக்கு 'சைவ சித்தாந்த கலாநிதி', 'பெரும்புலவர்' போன்ற பல பட்டங்கள் வழங்கப்பட்டன. சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகள்) போன்ற சமகாலத் தமிழறிஞர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.

தமது வாழ்நாள் முழுவதையும் தமிழ் ஆராய்ச்சிக்கும், தத்துவப் பரப்புரைக்கும் அர்ப்பணித்த கா. சுப்பிரமணிய பிள்ளை, 1945-ஆம் ஆண்டு டிசம்பர் 12-ஆம் நாள் தமது 57-ஆம் வயதில் இயற்கை எய்தினார்.


அகர முதல இலக்கியப் பேரவை
நாளை
நமதே
நம்பிக்கை உள்ள இடத்தில்,
எப்போதும்
வழிகள் பிறக்கும்!
அகர முதல இலக்கியப் பேரவை
Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com